பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 02 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

# <u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து அவர்களின் வருமானத்தை பெருக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
2. நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் நோய் தடுப்புத் திட்டப்பணிகள் 98 புள்ளி ஏழு சதவீதம் நிறைவடைந்திருப்பதாக மத்திய இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.
3. நாடு முழுவதும் 29 ஆயிரம் மின்சார வாகன சார்ஜிங் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்துள்ளார்.
4. இந்தியா — ஹங்கேரி இடையே வெளியுறவுத்துறை செயலர்கள் நிலையிலான 11-ஆவது சுற்று ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெற்றது.
5. சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசி குமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து அவர்களின் வருமானத்தை பெருக்க மத்திய அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தில் இதை தெரிவித்த அமைச்சர், 22 முக்கிய வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டு, கொள்முதல் செய்யப்படுவதாக தெரிவித்தார்.

நெல் மற்றும் கோதுமையை இந்திய உணவுக்கழகமும், மாநில அரசின் அமைப்புகளும் குறைந்த பட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்து வருவதாக அவர் கூறினார்.

எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள், கொப்பரை போன்றவற்றையும் மத்திய அரசின் ஆஷா உள்ளிட்ட திட்டங்களின் மூலம் கொள்முதல் செய்வதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான DAP யூரியா உள்ளிட்ட உரங்களுக்கு மானியம் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளின் விளைப்பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள பயிற்சி கணக்கு அதிகாரிகள் இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்தனர்.

இதுதொடர்பாக குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்திய சிவில் அக்கவுண்ட் சேவை, இந்திய பாதுகாப்பு கணக்குகள் சேவை, அஞ்சல் மற்றும் தொலைபேசி சேவை, இந்திய ரயில்வே நிர்வாக அமைப்பு ஆகியவற்றில் பணியில் சேர்ந்துள்ள இந்த அதிகாரிகளுக்கு ஹரியானா மாநிலம் ஃபரிதாபாதில் உள்ள அருண்ஜேட்லி தேசிய நிதி மேலாண்மை கல்விக்கழகத்தில் தொழில் ரீதியான பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வரும் ஆண்டுக்கான பட்ஜெட் மீதான விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தை காங்கிரஸ் உறுப்பினர் திரு சசிதருர் தொடங்கிவைத்தார்.

இதில் அரசு செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகவும், வரி வருவாயில் பெரிய மாற்றம் எதுவும் இல்லை என்றும் கூறினார்.

தனிநபர்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், பெரிய நிறுவனங்களுக்கு வரிச்சுமை குறைக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பிஜேபி உறுப்பினர் திருமதி அபராஜிதா சாரங்கி, இந்த பட்ஜெட் மத்திய அரசின் அர்ப்பணிப்புடன் கூடிய செயல்பாட்டை வெளிப்படுத்துவதாக தெரிவித்தார்.

அரசு மேற்கொண்டுள்ள தடையில்லா வர்த்தக ஒப்பந்தங்கள், இந்தியாவின் தெளிவான அணுகுமுறையை பிரதிபலிப்பதாகவும் அவர் கூறினார்.

மாறிவரும் உலகச்சூழலுக்கு ஏற்ப நாட்டின் அணுகுமுறை அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

சிவசேனா உறுப்பினர் திரு **Milind Deora**, உலக அரசியலிலும், பொருளாதாரத்திலும் நெருக்கடியான சூழல் நிலவி வரும் வேளையில், இந்தியா ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத் தன்மையை உறுதி செய்துள்ளதாகவும் கூறினார்.

திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி, ஏழை மக்களுக்கு எதிரான பட்ஜெட் இது என்று கூறினார்.

நாட்டின் பொருளாதார நிலைமையை கணக்கில் எடுக்காமல் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி உறுப்பினர் திரு சுரேந்திர சிங் நாகர், பொருளாதார வளர்ச்சி விகிதத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்திருப்பதோடு, பல சமூக நலத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவதற்கான நோட்டீஸை எதிர்க்கட்சிகள் இன்று மக்களவைச் செயலரிடம் கொடுத்துள்ளன.

இந்த நோட்டீஸ் குறித்து முழுமையாக ஆய்வு செய்தபின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்களவை செயலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, ராஷ்ட்ரிய ஜனதாதள் மற்றும் இடதுசாரி கட்சிகள் இந்த நோட்டீஸில் கையெழுத்திட்டுள்ளன.

திரிணாமுல் காங்கிரஸ் இதில் கையெழுத்திடவில்லை.

<<<<<>>>>>

தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அஸ்ஸாம் மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் இவ்வாண்டு நடைபெறுவதையொட்டி, சொந்த மாவட்டங்களில் பணியாற்றும் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்யுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் இந்த மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் மற்றும் மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், கடந்த நான்கு ஆண்டுகளில்

மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றிய அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இந்த பணியிட மாற்றங்கள் இம்மாதம் 27-ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டு, தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் நோய் தடுப்புத் திட்டப்பணிகள் 98 புள்ளி ஏழு சதவீதம் நிறைவடைந்திருப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தில் இத்தகவலை வெளியிட்ட அமைச்சர், நோய் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, கருச்சிதைவு மற்றும் சிசு மரணம், ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மரணம் உள்ளிட்டவை கணிசமாக குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

நோய் பாதிப்பால் குழந்தைகள் இறப்பு சதவீதம் உலக சராசரியைவிட நாட்டில் குறைவாகவே உள்ளது என்றும் அவர் கூறினார்.

நோய் தடுப்பு நடவடிக்கைகளை விரைவுப் படுத்துவதற்காக அறிமுகம் செய்யப்பட்ட **U-WIN** இணையதளத்தின் மூலம் பயனாளிகள் மருத்துவச் சேவையை விரைந்து பெற முடிவதாக அவர் தெரிவித்தார்.

அனைத்து நோய் தடுப்புப்பணிகளும் இந்த இணையதளத்தின்கீழ், இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கருவுற்ற தாய்மார்களுக்கு குறித்த காலத்தில் தடுப்பூசி செலுத்துவது மற்றும் பிறந்த குழந்தை முதல் **17** வயது வரை குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவது போன்ற பணிகள் இந்த இணையதளத்தின் வாயிலாக சிறப்பாக செய்யப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பயனாளிகளுக்கு தடுப்பூசி போடுவது மற்றும் அவர்களுக்கான பதிவேட்டை மின்னணு முறையில் பராமரிப்பது போன்றவை பயனுள்ள வகையில் அமைந்துள்ளதாகவும் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் **29** ஆயிரம் மின்சார வாகன சார்ஜிங் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய கனரக தொழில்துறை இணையமைச்சர் திரு பூபதி ராஜூ சீனிவாச வர்மா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதை தெரிவித்த அமைச்சர், **FAME — 2** திட்டத்தின்கீழ், மத்திய அரசு தொள்ளாயிரத்து **12** கோடி ரூபாய், மின் வாகன சார்ஜிங் மையங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் கூறினார்.

பிரதமரின் **E-DRIVE** திட்டத்தின்கீழ், பொது இடங்களில் மின்சார சார்ஜிங் கட்டமைப்பை நிறுவுவதற்கு, **2** ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியா — ஹங்கேரி இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் வெளியுறவுத்துறை செயலர்கள் நிலையிலான **11-**ஆவது சுற்று ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெற்றது.

வெளியுறவு அமைச்ச செயலர் திரு சிபி ஜார்ஜ், ஹங்கேரி நாட்டின் வெளியுறவு செயலர் திருமதி **Boglarka** ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, அறிவியல் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி, நீர் மேலாண்மை, கல்வி மற்றும் கலாச்சார தொடர்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஐரோப்பிய மற்றும் இந்தோ பசிபிக் மண்டல அரசியல் விவகாரங்கள் குறித்தும் இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்றது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசி குமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர், 7-5, 6-3, என்ற செட் கணக்கில் நிதின் குமார் சின்ஹாவை வென்றார்.

-----------

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ராகுல் மாலிக், கார்த்திகேயன், அபினய், சனில் ஷெட்டி உள்ளிட்டோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவில் **Neha Kumari, Shruti, Sammridhi** உள்ளிட்டோரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

உலகக்கோப்பை டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 173 ரன் எடுத்தது.

174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நியூசிலாந்து 15 புள்ளி இரண்டு ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டியது.

தில்லியில் இன்று குரூப் ஏ பிரிவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், நெதர்லாந்து — நமீபியாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

<<<<<END>>>>>